பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

17 05 2024 **FRIDAY** 12 40 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மக்களவைத் தேர்தலில் ஐந்தாம் கட்ட வாக்குப்பதிவுக்கான தேர்தல் பிரச்சாரத்தில் பிஜேபி, காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

- அடுத்த மாதம் 1ஆம் தேதி நடைபெறவுள்ள 7வது மற்றும் இறுதிகட்ட வாக்குப்பதிவிற்கான வேட்புமனுக்களை திரும்பப் பெறுவதற்கு இன்று கடைசி நாளாகும்.

- உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப விழிப்புணர்வு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

- தமிழ்நாடு, கேரளா மற்றும் புதுச்சேரியில் அடுத்த ஐந்து நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் மும்பை இன்று லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

>>>><<<

மக்களவைத் தேர்தலில் ஐந்தாம் கட்ட வாக்குப்பதிவிற்கான பிரச்சாரம் நாளை நிறைவடைவதை அடுத்து, அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் வேட்பாளர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, மும்பை தெற்கு, மத்திய தொகுதியில் இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரிக்கிறார்.

பிஜேபி மூத்த தலைவர் திரு. அமித் ஷா, உத்தரபிரதேசம், ஜார்க்கண்ட், ஒடிசா மாநிலங்களில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

உத்தரபிரதேச மாநிலம், அமேதியிலும், ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியிலும் அவர் பொதுக்கூட்டங்களில் உரையாற்றுகிறார்.

ஒடிசா மாநிலம் செல்லும் அவர் ரூர்கேலாவில் வாக்கு சேகரிக்கவுள்ளார்.

ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளரும், தில்லி முதலமைச்சருமான திரு. அரவிந்த் கெஜ்ரிவால், பஞ்சாப் மாநிலம், அம்ரிட்ஸரில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

அஸ்ஸாம் முதலமைச்சர் திரு. ஹிமந்த பிஸ்வ சர்மா, **Loisingha, Kantabanji** ஆகிய இடங்களில் வாக்கு சேகரிக்கிறார்.

**>>>><<<**

மக்களவைத் தேர்தலில் 7வது மற்றும் இறுதிகட்ட வாக்குப்பதிவிற்கான வேட்புமனுக்களை திரும்பப் பெறுவதற்கு இன்று கடைசி நாளாகும்.

7 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் அடுத்த மாதம் 1ஆம் தேதி நடைபெறவுள்ள 7வது கட்ட தேர்தலில் மொத்தம் 57 மக்களவை தொகுதிகள் உள்ளன.

உத்தரபிரதேசம் மற்றும் பஞ்சாபில் தலா 13 தொகுதியிலும், மேற்குவங்கத்தில் 9, பீகாரில் 8, ஒடிசாவில் 6, ஹிமாச்சலப்பிரதேசத்தில் 4, ஜார்க்கண்ட்டில் 3, சண்டிகர் யூனியன் பிரதேசத்தில் ஒரு தொகுதியிலும் ஏழாவது கட்ட தேர்தல் நடைபெறவுள்ளது.

மொத்தம் ஏழு கட்டங்களில் பதிவான வாக்குகள் அடுத்த மாதம் 4ஆம் தேதி எண்ணப்படவுள்ளன.

**>>>><<<**

ஆந்திரப்பிரதேசத்தில் வாக்குப்பதிவுக்குப் பின் நடைபெற்ற வன்முறையை தேர்தல் ஆணையம் கண்டித்துள்ளது

வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று அம்மாநில தலைமைச் செயலாளர் மற்றும் காவல்துறை தலைவருக்கு ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

ஆந்திரப்பிரதேசத்தில் வாக்கு எண்ணிக்கைக்குப் பிறகும் மத்திய ஆயுத காவல்படையினரை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்று உள்துறை அமைச்சகத்திற்கு தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ் குமார், தேர்தல் ஆணையர்கள் திரு. கியானேஷ்குமார், திரு. சுக்பிர் சிங் சாந்து ஆகியோர் அறிவுறுத்தியுள்ளனர்.

இதுபோன்ற வன்முறை சம்பவங்கள் மீண்டும் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

முன்னதாக வன்முறையை கட்டுப்படுத்துவதில் ஏற்பட்ட நிர்வாக தோல்வி குறித்து விளக்கமளிக்குமாறு ஆந்திரப்பிரதேச தலைமைச் செயலாளருக்கும், காவல்துறை தலைவருக்கும் தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பி இருந்தது.

வாக்குப்பதிவுக்குப் பிறகு ஆனந்தபுரமு, பல்நாடு மற்றும் திருப்பதி மாவட்டங்களில் வாக்குப்பதிவு நாளன்றும், அதன்பிறகும் பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றதை அடுத்து தேர்தல் ஆணையம் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

>>>><<<

உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப விழிப்புணர்வு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இணையதளம் மற்றும் தகவல் தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில், இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

நாட்டின் மின்னணு தொழில்நுட்ப பயணத்தில் மக்களுக்கான அதிகாரங்களை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது.

கடந்த சில ஆண்டுகளில் தொலைத்தொடர்பு துறையில் அபரிமிதமான வளர்ச்சி காணப்பட்டுள்ளது.

நாட்டில் 99 சதவீதம் பேர் 4-ஜி தொலைத்தொடர்பை பயன்படுத்தி வருகின்றனர்.

6 லட்சத்திற்கும் மேற்பட்ட கிராமங்களில் 4-ஜி தொலைத்தொடர்பு சேவை பயன்பாட்டில் உள்ளது.

புதிதாக கொண்டு வரப்பட்டுள்ள 5-ஜி தொழில்நுட்ப சேவை வழங்குவதற்காக 4 லட்சத்திற்கும் மேற்பட்ட தகவல் தொடர்பு கோபுரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

அரசின் பல்வேறு சேவைகளை மக்கள் தங்கு தடையின்றி பயன்படுத்திக் கொள்ளும் வகையில் எளிய தகவல் தொடர்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

>>>><<<

தஞ்சை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மூன்று குழந்தைகளுக்கு பிறவியிலேயே இருந்த இருதய குறைபாடு அறுவை சிகிச்சை இல்லாமல் சரிசெய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய மருத்துவமனையின் முதல்வர் திரு. பாலாஜி நாதன், கேத்லேப் என்ற இந்த சிகிச்சை முறைக்கு தனியார் மருத்துவமனைகளில் மூன்று லட்சம் ரூபாய் வரை செலவாகும் என்று தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - பாலாஜி நாதன் 66 செகண்ட்ஸ்)

>>>><<<

மகாராஷ்ட்டிரா கடற்கரைக்கு அப்பால், சட்டவிரோதமாக டீசல் கடத்தலில் ஈடுபட்டதாக கிடைத்த தகவலின் பேரில், இந்திய கடலோர காவல்படை, மீன்பிடி படகு ஒன்றை கைப்பற்றியுள்ளது.

மீன்பிடி படகுகளின் மூலம் டீசல் கடத்தப்படுவதாக எழுந்த புகாரை அடுத்து, இந்திய கடலோர காவல்படையின் ஐந்து பேர் கொண்ட குழு, சோதனை மேற்கொண்டது.

இதில் பிடிபட்ட படகு மும்பை துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டது.

சுமார் 5 ஆயிரம் லிட்டர் எரிபொருளை மீனவர்கள் விற்பனை செய்ததாகவும், இதுதொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த 3 நாட்களில் மட்டும் 55 ஆயிரம் லிட்டர் கணக்கில் வராத டீசல் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக அதிகாரிகள் கூறினர்.

>>>><<<

புதிய குற்றவியல் நடைமுறைச் சட்டங்களை கையாள்வது குறித்த, காவல்துறை அதிகாரிகளுக்கான இரண்டு நாள் பயிலரங்கை புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று தொடங்கி வைத்தார்.

இந்திராகாந்தி மருத்துவக் கல்லூரி வளாகத்தில் நடைபெறும் இப்பயிலரங்கில், புதுச்சேரி காவல்துறை அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர்.

**>>>><<<**

இந்தியாவுடனான இருதரப்பு உறவுகளை மேம்படுத்த **Trinidad & Tobago** மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளதாக அந்நாட்டு பிரதமர் திரு. **Keith Christopher Rowley** தெரிவித்துள்ளார்.

மும்பையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், **Trinidad**-டில் கிரிக்கெட் பயிற்சி கல்லூரி அமைப்பதற்கான ஆலோசனைகளை இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொள்ளவிருப்பதாக கூறினார்.

**Trinidad**-ன் வளர்ச்சிக்கு இந்தியா அதிக அளவில் முதலீடு செய்ய முன்வர வேண்டும் என்று அந்நாட்டு பிரதமர் கேட்டுக் கொண்டார்.

**>>>><<<**

நாட்டின் வடமேற்குப் பகுதி மற்றும் பீஹாரில் அடுத்த 5 நாட்களுக்கு கடும் வெப்பம் நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ராஜஸ்தானின் மேற்குப் பகுதி பஞ்சாப், ஹரியானா மற்றும் தில்லியில் அடுத்த 3 நாட்களுக்கு கடும் வெப்பம் நிலவக்கூடும் என்று கூறியுள்ளது.

கிழக்கு மற்றும் மத்தியப் பகுதிகளிலும் நாளை முதல் கடும் வெப்பநிலை ஏற்படலாம் என்று தெரிவித்துள்ளது.

சிக்கிம், அருணாச்சலப்பிரதேசம், அசாம் மற்றும் மேகாலயா மாநிலங்களின் குறிப்பிட்ட பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ராஜஸ்தான் மாநிலம் ஸ்ரீகங்காநகர், பார்மர் பகுதியில் நேற்று அதிகபட்ச வெப்பநிலை 46 டிகிரி செல்சியசாக இருந்தது.

மாநிலத்தின் வடமேற்குப் பகுதியின் வெப்பநிலை 45 டிகிரி செல்சியசை தாண்டி நிலவியதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே தமிழகம், புதுச்சேரி, காரைக்கால், கேரளா, மாஹே, கர்நாடகாவின் தென்பகுதி ஆகிய இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

குறிப்பாக மேற்குத் தொடர்ச்சி மலை பகுதிகளில் உள்ள மாவட்டங்களில் மிதமானது முதல் கனமழை பெய்ய வாய்ப்பிருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

நீலகிரி, கோவை உள்ளிட்ட மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

(வாய்ஸ் பைட் - சரவணன் 47 செகண்ட்ஸ்)

**>>>><<<**

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் மும்பை இன்று லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

**>>>><<<**

ஒலிம்பிக் பதக்க இலக்கு திட்டத்தில் ஸ்குவாஷ் வீரர்கள் **Anahat Singh, Abhay Singh, Velavan Senthil Kumar** ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

2028ஆம் ஆண்டு லாஸ் ஏஞ்சல்சில் நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டியில் இவர்கள் பதக்கம் பெறும் நோக்கில் உரிய பயிற்சி அளிக்கப்படும் என்று மத்திய விளையாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**>>>><<<**